LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்

வணிக மாத இதழ்

Volume: 15 Issue : 07 OCTOBER 2026 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE





Sourashtra Chamber of Commerce New elected Board for the Year 2026-2028

To

BOOK POST



Fine Printers

Graphic | Print | Packaging



CTP
PREPRESS SOLUTIONS



WEDDING CARDS | BROUCHER | FLYERS | CALANDERS

PACKAGING BOX | LABELS



+91 93441 33320 +91 63834 33909
+91 82489 30871
finekumaran5@gmail.com
137/1 South Marret Street, (Manjanakkara St. Junction), Madurai - 625 001.



JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम

133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105 ESTD : 1968

Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

Prof. Dr. M.V. SUBBURAMAN

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

Ananda Nilayam

Mayflower

The Banquet Hall A/C

Location - Google Map

Marriage Function | Betrothal | Naming Ceremony
Birthday Party | Puberty | Get-to-gether

Hall available for all type of functions

Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001

For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583



தலைவர் அறிக்கை

அன்பே தெய்வம் என்னும் பொறை

நமஸ்கார்...

2026-2028ம் ஆண்டிற்கான ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் தலைவராக தங்கள் அனைவரின் பேராதரவுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளேன் என்பதில் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

அடுத்த இரண்டாண்டுகாலத்திற்கு என் தலைமையிலான பணிகள் நம் சேம்பர் அங்கத்தினர்களுக்கு பயன் தரும் வகையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடன் பயணிக்க இருக்கும் துணைத் தலைவர்கள் திரு. A.B. குமரேஷ் பாபு, திரு. K.K. தினகரன், பொதுச் செயலாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி, பொருளாளர் திரு. T.N. சூரியபிரகாஷ், இணைச் செயலாளர் திரு. E.R.K. விக்னேஷ் பாபு மற்றும் திரு. T.M. ருபேஷ் பாபு ஆகியோரின் பங்களிப்பு நிச்சயம் நம் சேம்பர்-ஐ வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்லும். குறிப்பாக, இணைச் செயலாளர்களாக இணைந்துள்ளவர்கள் இளைய தலைமுறையினர்கள். தற்காலத் தலைமுறையினரின் மனநிலையோடு செயல்படக்கூடியவர்கள், அவர்களின் செயல்பாடுகள், முயற்சிகள் புதிய பாதையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

நமது சேம்பர் கடந்த பதினெட்டு ஆண்டுகாலமாக தொடர்ந்து தொழில் வளர்ச்சிக்கும், தொழில்முனைவோர்களின் நலனுக்கும் உரிய சேவைகளை செய்து வருகிறது. முன்னாள் தலைவர்கள் காட்டிய பாதையில், அடுத்து வரும் நிர்வாகிகள் தவறாமல் பயணித்ததன் காரணமாக, சமீப காலமாக தமிழ்நாடு அளவில் சேம்பர்-ன் பெருமை விரிவடைந்துள்ளது எனலாம்.

தமிழக சட்டசபையின் பட்ஜெட் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம்.எம். கோபிசன் அவர்கள், தென் தமிழக தொழில் வளர்ச்சி வேண்டி பேசுகையில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பெயரையும் சட்டசபையில் குறிப்பிட்டுப் பேசியது அனைவரின் கவனத்தைப் பெற்றது.

பிவிகே குழுமம் கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்திய விருது வழங்கும் நிகழ்வில், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-க்கு சிறந்த தொழில் அமைப்பிற்கான விருதை வழங்கி கௌரவித்தது. புதிய நிர்வாகக்குழு பொற்றுப்பேற்ற பிறகு, கும்பகோணத்தில், கடந்த செப்டம்பர் மாதம், ஸௌராஷ்ட்ர மத்ய சபை நடத்திய ஸௌராஷ்ட்ர சங்கமம் விழாவில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-க்கு தொழில் வர்த்தக சிகரம் என்ற விருதை வழங்கி கௌரவித்தது.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பெருமை, தமிழ்நாடு முழுவதும் உள்ள நம் சமூக மக்களிடையே சென்றடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இது நம் சேம்பர்-ல் உள்ள உறுப்பினர்களுக்கு, தான் ஒரு சேம்பர் உறுப்பினர் என்ற பெருமையை தருகிறது. புதியவர்கள் இணையவும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. வரவேற்கிறோம்.

நன்றி.

SOURASHTRA CHAMBER OF COMMERCE

BOARD OF MEMBERS
YEAR 2024-2026

Office Bearers	Designation	Contact
K.K. Kubendran	President	93441 25647
K.K. Dinesh	Imm. Past President	98421 16461
A.B. Kumaresh Babu	Vice President	93443 04980
K.K. Dinakaran	Vice President	98409 60833
V.V. Ramlakshmanji	General Secretary	94439 30728
T.N. Suriyaprakash	Treasurer	93441 52068
E.R.K. Vignesh Babu	Joint Secretary	94422 44648
T.M. Rubesh Babu	Joint Secretary	95000 35200
T.K. Sivanath Babu	EC Member	94423 27081
S.K.B. Chandraprakash	EC Member	98655 45048
N.S. Prem Kumar	EC Member	99944 35350
K.V. Kumaresan	EC Member	98940 51735
S.S. Ramsundar	EC Member	93441 22181
S.S. Premkumar	EC Member	96293 42295
S.R. Sundarnath	EC Member	92444 03917
M.M. Dhanasekaran	EC Member	98421 58085
K.B. Sivaprakash Babu	EC Member	94433 66251
T.K. Yageshwaran	EC Member	99524 22260
K.S. Sivakumar	EC Member	93441 51331
E.S. Ramesh Babu	EC Member	92442 31583
M.R. Muralidharan	EC Member	94885 53218
T.T. Sethuram	EC Member	89251 87262
N.P. Saravana Kumar	EC Member	93452 09338
K.K. Sankar	EC Member	97881 62559
Bhaskar Laguduva	EC Member	80883 38268

Past Presidents cum EC Members		Contact
K.V. Bala, Senior President	- Yr. 2007-2009	044 2833 0867
C.K. Sekar	Yr. 2009-2011	97900 77111
E.R. Kumaresan	Yr. 2011-2013	93674 66777
K.K.G. Prabhakaran	Yr. 2013-2015	98409 60845
S.K.R. Ramesh	Yr. 2015-2017	96552 34409
M.K. Kaladhar Babu	Yr. 2017-2019	99944 84443
Kumaran B. Jaghuva	Yr. 2019-2022	99949 26348
T.R. Mohanram	Yr. 2022-2024	93441 01432
Advisors		
T.K.D. Mohan		98430 52530
V.G. Ramdoss		93441 00360

Patron Members	
(Late) K.K. Surendranath	M/s. Varuni Chemicals
K.S. Ravindranath	M/s. Indowind Energy Ltd., Chennai
M.K. Jawahar Babu	M/s. Jawahar Babu
K.R.M. Niranjan Kumar	M/s. India Ultra Sound, Calicut
E.R. Kumaresan	M/s. V.P.C. Textiles
M.R. Krishnamoorthy	M/s. PT. Kewalram, Indonesia
T.S. Sivaprakash	M/s. Shree Sivabalaji Steels (P) Ltd.,
(Late) K.B. Mohan	M/s. K.B. Mohan, Engineering
T.L. Dukaram	M/s. Anezlina Cosmos
T.L. Sabari Babu	M/s. Sowbhaagyaas Gold & Diamond
B.V. Ramesh	M/s. Karpagam Motors
T.E. Yogesh	M/s. The Constructive Company
L.G. Padmanabhan Iyer	M/s. Karishma Electro Platers, Mumbai

Editorial Board	Designation	Contact
K.K. Gnana Prabhakaran	Publisher	98409 60845
M.M. Dhanasekaran	Chairman	98421 58085
T.K. Yageswaran	Co-Chairman	99524 22260



பொதுச்செயலாளர் அறிக்கை

அனைத்தினருக்கும் வணக்கம்

- V.V. ராம்லக்ஷ்மண்ஜீ

உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் உறுப்பினர்கள் தங்களின் பேராதரவில் தற்போது 2026-2028ம் ஆண்டிற்கான பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு எனது செயல்பாடுகள் சேம்பர்-ல் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றும், அதன்மூலம் சேம்பருக்கே உள்ள நற்பெயரை தொடர்ந்து காத்து வருவேன் என்று உறுதியளித்துக்கொண்டு, தங்கள் அனைவரின் பேராதரவோடு என் பணியை தொடர்கிறேன்.

25.09.2026 – 19வது பொதுக் குழு கூட்டம் சரியாக காலை 10 மணிக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் வர்த்தக அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், 2026-28ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தேர்வு நடைபெற்றது. அங்கத்தினர்கள் பலர் கலந்த கொண்டனர்.

26.09.2026 – கும்பகோணத்தில் நடைபெற்ற ஸௌராஷ்ட்ர மத்ய சபையின் விருது வழங்கும் விழாவில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்க்கு ஸௌராஷ்ட்ர சமூகத்தின் சிறந்த தொழில் வர்த்தக அமைப்பிற்கான விருதை வழங்கி கௌரவித்தது.

05.10.2026 – மாநில ஜிஎஸ்டி வரி குறைதீர்க்கும் கூட்டத்திற்கு சேம்பர் சார்பாக அரசு தொடர்புக்குழு சேர்மன் திரு. என்.எஸ். பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை அளித்தார்.

06.10.2026 – 2026-2028ம் ஆண்டிற்கான பதவியேற்பு விழா மாலை 6 மணிக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் வர்த்தக அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக விஷால் தி மால் தலைவர் திரு. இளங்கோவன் அவர்களும், கௌரவ விருந்தினராக ஸ்ரீ மீனாட்சி கன்ஸ்ட்ரக்ஷன் திரு. சி.எல். ஸ்ரீதரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவில், புதிய தலைவர் திரு. கே.கே. குபேந்திரன் அவர்களை, உடனடி முன்னாள் தலைவர் திரு.கே.கே. தினேஷ் அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். விழாவில் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

10.10.2026 – தமிழக சிறுபான்மை நலத்துறை அமைச்சர் மாண்புமிகு. ஷாஜகான் அவர்களை சேம்பர் நிர்வாகிகள் சந்தித்தனர்.

லாப் ஸமாச்சார் – இதழ்குழு பொறுப்பாளர்கள்



Er. M.M. தனசேகரன்



T.K. யாகேஸ்வரன்

குழு உறுப்பினர்கள்

Dr. A.R. கணேசன்

M.G. விஜயகுமார் P.S. ரத்னகுமார்

M.K. யோகநாதன் J.R. விஜயராகவன்



தமிழக சட்டசபையில் ஒலித்த ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பெயர்

தமிழக சட்டசபையின் பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மதுரை மாண்புமிகு தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் Er. எம்.எம். கோபிசன் அவர்கள் மிக அருமையாக மதுரை மக்களின் கோரிக்கைகளை சட்டசபையில் பேசினார்.

முக்கியமாக தென் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கவும், அதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பலநாள் கோரிக்கையாக கேட்டு வரும் பல்வேறு தொழில் வர்த்தக அமைப்புகளுள் ஒன்றான நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பெயரையும் குறிப்பிட்டுப் பேசியது சேம்பர் உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளித்ததோடு, நமது கோரிக்கைகள் சட்டசபைக்குள் கொண்டு செல்லப்பட்டது பெருமகிழ்ச்சியை தந்தது.

மதுரை, நிர்வாக ரீதியாக தென்தமிழகத்தின் இரண்டாம் தலைநகராக உருவாக்க வேண்டும் என்று சட்டசபையில் முழுங்கியதை பொது மக்கள் அனைவரும் வரவேற்றனர்.

மதுரையில் நீர்நிலைகள், குறிப்பாக வைகை சீரமைப்பு, கிருதுமால் நதி மற்றும் சின்னக்கண்மாய் மீட்கக் கோரியது சிறப்பு.

மொழிவாரி சிறுபான்மை ஸௌராஷ்ட்ர மொழியை தமிழ்ப்பாட நூல் கழகத்தில் இணைக்க வேண்டும். அது பாடமொழியாகவோ, விருப்ப மொழியாகவோ கற்பிக்க வாய்ப்பு வழங்க வேண்டும் என்று தெரிவித்ததும், சிறுபான்மை நலத்துறையில் பிரதிநிதித்துவம் கோரியதும் ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்கு உத்வேகத்தை அளித்தது.



சிறுபான்மை நலத்துறை அமைச்சரை சந்தித்து ஸௌராஷ்ட்ர சேம்பர் ஸௌராஷ்ட்ர கலாச்சாரம் & மொழி வளர்ச்சிக்கு கோரிக்கை

10.10.2026 அன்று மதுரைக்கு வருகை தந்திருந்த மாண்புமிகு சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஷாஜகான் அவர்களை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் உடனடி முன்னாள் தலைவர் திரு. கே.கே. தினேஷ், அரசு தொடர்புக் குழு சேர்மன் திரு. என்.எஸ். பிரேம் குமார் ஆகியோர் நேரில் சந்தித்து மொழிவாரி ஸௌராஷ்ட்ர சிறுபான்மை மக்களின் பொருளாதாரம் மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கு சிறுபான்மை நலத்துறையில் அளிக்கப்படும் சலுகைகள் கிடைத்திட கோரிக்கை வைத்தனர். உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். இந்த சந்திப்பிற்கு உதவிய மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம்.எம். கோபிசன் அவர்களை ஸௌராஷ்ட்ர சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. இந்த சந்திப்பில், ஸௌராஷ்ட்ர சமூக நலப்பேரவை நிர்வாகிகளும் கலந்து கொண்டு மொழி வளர்ச்சிக்கு சிஎஸ்எல்சி குறித்து கோரிக்கை மனு அளித்தனர்.

Best Compliments

BVK GROUP



Bala V Kutti
Founder & Chairman

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.

Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai



19ம் ஆண்டு பொதுக் குழு கூட்டம்

2026-2028ம் ஆண்டிற்கான புதிய நிர்வகத் தேர்வு

சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 19ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் சென்ற மாதம் 25.09.2026 அன்று காலை சரியாக 10 மணிக்கு சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அரங்கில் சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், போஷக உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் சேம்பர் ஆயுட்கால மற்றும் ஆண்டு சந்தா உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய நிர்வாகம் மாறுவது வழக்கம். அதன்படி, 2024-2026ம் ஆண்டு நிர்வாகம் செப்டம்பர் மாதத்துடன் நிறைவுபெற்ற நிலையில், 2026-2028ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தேர்வு இந்த பொதுக்குழு கூட்டத்தில் அனைவரின் முழு சம்மதத்துடன் செயற்குழு மற்றும் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றன.

முன்னதாக, சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்களின் வரவேற்புரையுடன் கூட்டம் துவங்கியது. தொடர்ந்து, பொதுச் செயலாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு அவர்களின் ஆண்டறிக்கை மற்றும் சேம்பர் பொருளாளர் திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜி அவர்களின் 2025-2026ம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தல், பட்டயக்கணக்கர் மற்றும் அவரது கட்டண நிர்ணயம் செய்தல், 2025-26ம் ஆண்டில் இணைந்த புதிய உறுப்பினர்களை அங்கீகரித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி நிகழ்வுகளையடுத்து, புதிய செயற்குழு உறுப்பினர்கள் பெயர் விபரங்களை சேம்பர் உடனடி முன்னாள் தலைவர் திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்கள் அறிவித்தார். அவர்களை அங்கத்தினர்கள் அனைவரும் ஏகமனதுடன் ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து 7 நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இது புதிய செயற்குழு உறுப்பினர்களின் முழு ஒப்புதலுடன் நிர்வாகத்தேர்வு செய்யப்பட்டது.

அதன்படி 2026-2028ம் ஆண்டிற்கான தலைவராக திரு. கே.கே. குபேந்திரன், உடனடி முன்னாள் தலைவராக திரு. கே.கே. தினேஷ், துணைத் தலைவர்களாக திரு. ஏ.பி. குமரேஷ் பாபு & திரு. கே.கே. தினகரன், பொதுச் செயலாளராக திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜி, பொருளாளராக திரு. டி.என். சூரியபிரகாஷ், இணைச் செயலாளர்களாக திரு. இ.ஆர்.கே. விக்னேஷ் பாபு மற்றும் திரு. டி.எம். ருபேஷ்பாபு ஆகியோர் நிர்வாகிகளாகவும்,

திரு. டி.கே. சிவநாத் பாபு, திரு. எஸ்.கே.பி. சந்திர பிரகாஷ், திரு. என்.எஸ். பிரேம் குமார், திரு. கே.வி. குமரேசன், திரு. எஸ்.எஸ். ராம்சுந்தர், திரு. எஸ்.எஸ். பிரேம் குமார், திரு. எஸ்.ஆர். சுந்தர்நாத், திரு. எம்.எம். தனசேகரன், திரு. கே.பி. சிவப்பிரகாஷ் பாபு, திரு. டி.கே. யாகேஸ்வரன், திரு. கே.எஸ். சிவக்குமார், திரு. இ.எஸ். ரமேஷ் பாபு, திரு. எம்.ஆர். முரளிதரன், திரு. டி.டி. சேதுராம், திரு. என்.பி. சரவணகுமார், திரு. கே.கே. சங்கர் மற்றும் திரு. லகுடுவா பாஸ்கர் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக ஏகமனதுடன் தேர்வு செய்யப்பட்டனர்.

2026-2028 புதிய தலைவர் தேர்வு செய்யப்பட்டப் பிறகு, புதிய தலைவர் திரு. கே.கே. குபேந்திரன் அவர்கள் ஏற்பரை வழங்கினார். நிறைவாக, புதிய பொதுச் செயலாளர் திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜி அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



சௌராஷ்ட்ர சேம்பருக்கு

சிறந்த தொழில் வர்த்தக அமைப்பிற்கான சாதனை விருது

கடந்த 26.09.2026 அன்று சௌராஷ்ட்ர மத்ய சபை, சௌராஷ்ட்ர சாதனையாளர்களுக்கான மாபெரும் விருது வழங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. அதில், சிறந்த தொழில் வர்த்தக அமைப்பிற்கான சாதனை விருது, நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பிற்கு வழங்கப்பட்டது. இந்த விருதை, சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ்(2024-26) அவர்கள் பெற்றுக்கொண்டார். புதிய தலைவர் திரு. கே.கே. குபேந்திரன், செயலாளர் திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜீ மற்றும் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்களும், மத்ய சபைத் தலைவர் திரு. சுரேந்திரநாத் பாபு, குடந்தை ராமகிருஷ்ணா மடத்தின் தலைவர் சுவாமி. விமூர்த்தானந்தா ராஜ்கோட் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பரஷோத்தம் ருபாலா, சௌராஷ்ட்ர பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் திரு. ஜோஷிபுரா, ராயா திரு. ஸ்ரீநிவாசன் ஆகியோரும் உடனிருந்தனர்.

வரும் நவம்பர் & டிசம்பர் மாதங்களில்
இந்தியாவில் நடைபெற இருக்கும் தொழில் வர்த்தக கண்காட்சிகள்

Rajkot Machine Tools Show 2026

Date: Wed, November 25, 2026 - Sat, November 28, 2026
Time: 10:00 AM - 06:00 PM
Venue: NSIC GROUND, Rajkot, India

பேப்பரெக்ஸ் தென்னிந்தியா என்பது, உலகின் மிகப்பெரிய காகிதக் கண்காட்சியான பேப்பரெக்ஸின் ஒரு நீட்சியாகும். இந்தியாவின், சென்னை, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை டிரேட் சென்டரில் 2026 டிசம்பர் 03 முதல் 05 வரை நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சி, தென்னிந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் காகிதம் மற்றும் கூழ் தொழில்துறையைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், நிபுணத்துவம் வாய்ந்த கண்காட்சியாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் குறிப்பிட்ட பார்வையாளர்களை ஒன்றிணைக்கிறது. புகழ்பெற்ற நிபுணர்களால் வழிநடத்தப்படும் விரிவான தொழில்நுட்பக் கருத்தரங்குகள் மூலம் அறிவையும் நவீன தொழில்நுட்பங்களையும் பகிர்ந்து கொண்டு வளர்ச்சியை இது ஊக்குவிக்கிறது.

Plastech India Expo 2026

Date: Fri, November 27, 2026 - Sun, November 29, 2026
Time: 10:00 AM - 06:00 PM
Venue: Codissia Trade Fair Complex, Coimbatore, India

பிளாஸ்டெக் இந்தியா எக்ஸ்போ 2026 என்பது பிளாஸ்டிக் தொழில்துறைக்கான ஒரு முதன்மையான கண்காட்சியாகும். இது இந்தியாவின் கோயம்புத்தூரில் உள்ள கோடிசியா வர்த்தகக் கண்காட்சி வளாகத்தில், 2026 நவம்பர் 27 முதல் 29 வரை நடைபெற உள்ளது. இந்த மூன்று நாள் நிகழ்வு, முன்னணி பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குநர்கள், தொழில்நுட்ப வழங்குநர்கள், சேவை வல்லுநர்கள், புதுமையாளர்கள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்களை ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைக்கும். பிளாஸ்டிக் துறையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சமீபத்திய தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள், தீர்வுகள் மற்றும் புதுமைகளை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த தளத்தை வழங்கும். இந்தக் கண்காட்சியானது, வணிக வளர்ச்சியை ஆதரிப்பதோடு, தொழில்துறை வல்லுநர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்புகொண்டு புதிய சந்தைகளை ஆராய்வதற்கான மதிப்புமிக்க வாய்ப்புகளையும் உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Green Energy India Expo 2026

Date: Wed, December 9, 2026 - Fri, December 11, 2026
Time: 10:00 AM - 06:00 PM
Venue: Bangalore International Exhibition Centre, Bengaluru, India

இந்தியாவின் பெங்களூருவில் உள்ள பெங்களூரு சர்வதேச கண்காட்சி மையத்தில், 2026 டிசம்பர் 9 முதல் 11 வரை நடைபெறும். இது, நிலையான, குறைந்த கார்பன் எதிர்காலத்தை நோக்கிய இந்தியாவின் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முதன்மையான B2B தளமாகும். இது உலகளாவிய கண்டுபிடிப்பாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களுக்கான ஒரு முக்கிய சந்திப்பு இடமாக செயல்படுகிறது. இது சூரிய ஆற்றல், காற்று ஆற்றல் மற்றும் பசுமை ஹைட்ரஜன் ஆகியவற்றில் உள்ள சமீபத்திய முன்னேற்றங்களைக் காட்சிப்படுத்துவதோடு, வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனச் சூழலமைப்பு மற்றும் ஆற்றல் சேமிப்புத் தீர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. பங்கேற்பாளர்கள் அதிநவீன தொழில்நுட்பங்களை ஆராயலாம், உயர் மட்ட கொள்கை விவாதங்களில் ஈடுபடலாம், மேலும் தொழில்துறை மற்றும் நகர்ப்புறத் துறைகள் முழுவதும் தூய்மையான ஆற்றலை ஏற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்ட மூலோபாய கூட்டாண்மைகளை உருவாக்கலாம்.

Paperex South India 2026

Date: Thu, December 3, 2026 - Sat, December 5, 2026
Time: 10:00 AM - 06:00 PM
Venue: Chennai Trade Centre, Chennai, India

இந்தக் கண்காட்சியில் இயந்திரக் கருவிகள், வெட்டும் மற்றும் வடிவமைக்கும் கருவிகள், ரோபோடிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன், சிஎன்சி தொழில்நுட்பம், ஹைட்ராலிக்ஸ் மற்றும் நியூமேட்டிக்ஸ், வெல்டிங் உபகரணங்கள், பம்புகள் மற்றும் வால்வுகள், கியர்கள் மற்றும் டிரைவ்கள், வார்ப்பு உபகரணங்கள், பொருள் கையாளும் தீர்வுகள், சிஏடி/சிஏஎம், சோதனைக் கருவிகள் மற்றும் தொழில்துறை பாதுகாப்புப் பொருட்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்படும். ஆட்டோமொபைல், உள்கட்டமைப்பு, விவசாயம், பாதுகாப்பு, விண்வெளி, ரயில்வே, எண்ணெய் மற்றும் எரிவாயு, பிளாஸ்டிக், மின்சாரம், மின்னணுவியல் மற்றும் பிற முக்கியத் தொழில்துறைகளைச் சேர்ந்த சாத்தியமான வாங்குபவர்கள் மற்றும் முடிவெடுப்பவர்களுடன் தொடர்புகொள்வதற்கு, இது கண்காட்சியாளர்களுக்கு ஒரு சிறந்த தளத்தை வழங்குகிறது. இந்தியாவின் குஜராத் மாநிலம், ராஜ்கோட்டில் உள்ள அஜ்ஜி ஜிஜடிசி-யின் என்எஸ்ஜசி மைதானத்தில், 2026 நவம்பர் 25 முதல் 28 வரை நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சி, முன்னணி உற்பத்தியாளர்கள், தொழில்நுட்ப வழங்குநர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களை ஒன்றிணைக்கிறது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின்

மாத ஊதிய உச்ச வரம்பை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழு, மத்திய தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் ஒரு முக்கிய முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் கட்டாய சந்தா வரம்பிற்குள் வருவதற்கான மாத ஊதிய உச்ச வரம்பு ரூ15,000-லிருந்து ரூ 25,000-ஆக உயர்த்தப்படுகிறது.

இந்த முடிவின் மூலம், கூடுதலாக 51 லட்சத்திற்கும் அதிகமான ஊழியர்கள் கட்டாய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் வரம்பிற்குள் கொண்டு வரப்படுவர். இது தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு அம்சத்தை கணிசமாக விரிவுபடுத்தும்.

2004 முதல் 2014 வரையிலான பத்தாண்டுகளில், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் ஊதிய வரம்பில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. பின்னர் செப்டம்பர் 2014-ல் இது கணிசமாக உயர்த்தப்பட்டு ரூ.15,000-ஆக நிர்ணயிக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள ஊதிய உயர்வு, வருமான அதிகரிப்பு, முறைசார் வேலைவாய்ப்பின் தொடர்ச்சியான விரிவாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த உச்ச வரம்பை மேலும் ரூ 25,000-ஆக உயர்த்துவதன் மூலம், தற்போதைய முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- PIB News (16.09.2026)

மின்சாரத்திற்கு பதில் ஜெனரேட்டர்

தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தல்

தொழிற்சாலைகளில், இரவு 7:00 மணி முதல், இரவு 10:00 மணி வரை, மின் வாரிய மின்சாரத் திற்கு பதில், ஜெனரேட் டர் மின்சாரத்தை பயன் படுத்துமாறு, உயரழுத்த நுகர்வோரை, தமிழக மின் வாரியம் அறிவுறுத்தி உள்ளது.

தமிழகத்தில் வெயில் கடுமையாக இருப்பதால், தினசரி மின் தேவை, 20,000 21,000 மெகா வாட்டாக உள்ளது. அதை பூர்த்தி செய்வதில், 2,000 மெகாவாட்டுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில், தொழிற் சாலைகளில் இரவு, 7:00 மணி முதல், இரவு 10:00 மணி வரை, ஜெனரேட்டர் மின்சாரம் பயன்படுத் துமாறு, நேற்று அறிவுறுத் தப்பட்டு உள்ளது.

இது மின் துணை குறித்து, வாரியத்தின் நிறுவனமான, மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தின், மதுரை மின் துணை மையம் சார்பில், உயரழுத்த அனைத்து நுகர்வோர், உடனே மின் வாரிய மின்சார பயன் பாட்டை நிறுத்தி விட்டு, இரவு 7:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை, டீசல் இயக்க வேண்டும். ஜெனரேட்டரை 'கிரிட்' 'அவசர, மேலாண்மையை சீராக்க, இந்த நடவடிக்கை உட னடி அமலுக்கு தேவைப்படுகிறது' மொழியாக என, வாய் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, வாரிய மின் அதிகாரிகளிடம் கேட்டபோது, 'மின் வழித் தடத்தில், நேற்று இரவு 7:00 மணி அளவில், திடீ ரென பாதிப்பு ஏற்பட இருந்ததால், அதை சமா ளிக்க ஜெனரேட்டரை பயன்படுத்துமாறு கூறப் பட்டது; மற்றபடி மின் பற்றாக்குறை வில்லை' என்றனர். ஏற்படவில்லை என்றனர்.

- தினமலர்

இந்தியா-ஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பல்வேறு தரப்பினருக்கு மாபெரும் வாய்ப்புகளை வழங்குகிறது

ஐரோப்பிய ஒன்றியம் - இந்தியா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் (EU-India Free Trade Agreement) சுமார் 200 கோடி மக்களை உள்ளடக்கிய ஒரு பிரம்மாண்ட பொருளாதார மண்டலத்தை உருவாக்குகிறது. இது இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் செய்யப்படும் 90%-க்கும் அதிகமான பொருட்கள் மீதான வரிகளை நீக்குகிறது அல்லது குறைக்கிறது.

இந்தியா - ஐரோப்பிய ஒன்றிய தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (India-EU FTA) என்பது சுமார் இரண்டு தசாப்த கால (20 ஆண்டுகள்) பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, 2026 ஜனவரி 27 அன்று வெற்றிகரமாக இறுதி செய்யப்பட்டது. இது உலக வர்த்தக வரலாற்றில் ஒரு மிக முக்கியமான மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் மூலம் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜியிலிணுழியி ஜும்ணீ) கால் பங்கையும் (25%), உலக வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்கையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 டிரில்லியன் அமெரிக்க டாலர் சந்தை உருவாகிறது.

2026 ஆம் ஆண்டின் இறுதியில் (டிசம்பர் மாதத்திற்குள்) இந்த ஒப்பந்தத்தில் இருதரப்பும் அதிகாரப்பூர்வமாக கையெழுத்திட திட்டமிட்டுள்ளனர். 2027 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் (மார்ச் 2027-க்குள்) இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருநாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு வர்த்தகம் 41% முதல் 65% வரை அதிகரிக்கும் என பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர்.

ஒப்பந்தம் அமலுக்கு வரும் முதல் நாளில் இருந்தே, இந்தியாவின் 70.4% வர்த்தகப் பொருட்களுக்கு 0% வரி (Zero-Duty) விதிக்கப்படும். ஜவுளி, தோல் பொருட்கள், கடல் உணவுகள் மற்றும் நகைகள் போன்ற உழைப்பு சார்ந்த துறைகளுக்கு EU விதிக்கும் வரிகளை நீக்குகிறது.

ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் 92.1% பொருட்கள் மற்றும் 97.5% இறக்குமதி மதிப்புக்கு இந்தியா வரி சலுகைகளை வழங்குகிறது.

IT, பொறியியல் மற்றும் பிற தொழில்முறை வல்லுநர்கள் ஐரோப்பாவில் தங்கி பணிபுரிவதற்கான தற்காலிக மற்றும் பல வருட பணி அனுமதிகளை (Work Permits) எளிதாக்குகிறது.

இந்தியாவின் வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கத்தினரை சென்றடைய ஐரோப்பிய இயந்திரங்கள், இரசாயனங்கள், மருந்துகள் மற்றும் ஒயின் மீதான வரிகள் குறைக்கப்படுகின்றன.

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியாளர்களையும் விவசாயிகளையும் பாதுகாப்பதற்காக சில முக்கிய உணர்திறன் மிக்க துறைகளுக்கு இந்த ஒப்பந்தத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- பால் பொருட்கள் (Dairy)
- தானியங்கள் (Cereals)
- கோழி இறைச்சி (Poultry)
- சர்க்கரை (Sugar)

ஆகிய துறைகளில் ஐரோப்பிய இறக்குமதிக்கு வரி சலுகைகள் வழங்கப்படாது.

எல் நினோ: அச்சம் தேவையில்லை

பசிபிக் பெருங்கடலில் தற்போது ஒரு வலுவான 'எல் நினோ நிலை உருவாகியுள்ளது. 2027-ஆம் ஆண்டில் எல் நினோ தாக்கத்தால் தமிழ்நாட்டின் வெப்பநிலை, வெப்ப அழுத்தம் ஆகியவற்றில் இது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும்? அதிக வெப்பமானதாக இருக்குமா? வெப்ப அலைகள் அடிக்கடி நிகழக்கூடுமா? இப்போது துல்லியமாகச் சொல்ல இயலாவிட்டாலும், எல் நினோ ஒரு முக்கிய வானிலை காரணியாகத் தொடரும். இதற்காகப் பதற்றம் அடையத் தேவையில்லை ஆனால் இதை எதிர்கொள்ளவும் கையாளவும் நாம் தயாராக இருக்க வேண்டும் என்கிறார் இந்திய வானிலை ஆய்வுத் துறையின் சென்னை மண்டல வானிலை ஆய்வு மையத் தலைவர் முனைவர் வி.ஆர்.துரை. எல்நினோ தாக்கம் குறித்து எழும் பொதுவான சந்தேகங்களுக்கு அவர் அளித்த விளக்கங்கள்:

எல் நினோ என்றால் என்ன?

மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள பசிபிக் பெருங்கடல் பகுதியில் சுடல் மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்துக்கு மாறாக உயர்வதும், அதனுடன் தொடர்புடைய வளிமண்டலக் காற்று சுழற்சியில் ஏற்படும் மாற்றங்களுமே 'எல் நினோ' ஆகும். இது இந்தியா உள்பட உலகின் பல்வேறு பகுதிகளில் வானிலை அமைப்புகளைப் பாதிக்கக்கூடிய ஒரு முக்கியமான வானிலை நிகழ்வு. இதன் தாக்கம் ஒவ்வொரு பகுதிக்கும், பருவகாலத்துக்கேற்ப மாறுபடுகிறது.

எல் நினோவின் தற்போதைய நிலை என்ன?

2026-ஆம் ஆண்டில் தற்போதைய எல் நினோ நிகழ்வு கணிசமாக வலுவடைந்துள்ளது. 'நினோ-3.4' பகுதியின் கடல் மேற்பரப்பு வெப்பநிலை மாறுபாடு, 2026 மே-ஜூலை மாதங்களில் சுமார் 1.5 டிகிரி செல்சியஸாக டு இருந்த நிலையில், ஜூலை மாதத்தில் 2.0 டிகிரி செல்சியஸை எட்டியது; அதனை தொடர்ந்து ஜூலை மாத இறுதியிலும், ஆகஸ்ட் மாத மத் தியிலும் வாராந்திர மதிப்புகள் சுமார் +2.2 டிகிரி செல்சியஸ் முதல் +2.6 டிகிரி செல்சியஸ் வரை உயர்ந்தன. இந்த நிகழ்வு மேலும் வலுவடைந்து, நிகழாண்டின் இறுதியில் மிக அதிக தீவிரத்தை அடையக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2027-ஆம் ஆண்டு வரை நீடிக்குமா?

இந்திய பருவமழைத் திட்டத்தின் கால நிலை மதிப்பீடுகளின்படி, எல் நினோ நிகழ்வு 2027-ஆம் ஆண்டின் தொடக்கம் வரை நீடிக்க அதிக வாய்ப்பு உள்ளது. உலக வானிலை ஆய்வு அமைப்பின் தகவலின்படி, பிப்ரவரி 2027 வரை நீடிப்பதற்கு 100 சதவீதம் வாய்ப்பு உள்ளது. இருப்பினும், இந்தக் காலகட்டம் முழுவதும் அதன் தீவிரம் ஒரே சீராக இருக்கும் என்று இதற்குப்பொருளல்ல.

தமிழ்நாட்டில் வெப்பமான சூழல் நிலவுமா?

இல்லை. தீவிரமான எல் நினோ நிகழ்வு சில காலகட்டங்களில் வெப்பமான சூழல் நில வுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கக்கூடும். ஆனால், அதற்காக ஆண்டு முழுவதும் தமிழ் நாட்டில் தொடர்ந்து வெப்பம் நிலவும் என்று அர்த்தமல்ல. உண்மையான வெப்பநிலை நில வரமானது இந்தியப் பெருங்கடல் இருமுனைத் தன்மை, மேடன்-ஜூலியன் அலைவு, வளி மண்டலச் சுழற்சி, மேகமூட்டம், மழைப்பொழிவு மற்றும் பிற பிராந்தியக் காரணிகளைச் சார்ந்தும் அமையும். எனவே. எல் நினோவை மாத வாரியான நேரடி வானிலை முன்னறிவிப்பாகக் கருதாமல், ஒரு முக்கியமான காலநிலை அறிகுறியாகவே கருத வேண்டும்.

'எல் நினோ' வலுவிழ்ந்த பிறகும் வெப் பத்தை அதிகரிக்கும் தாக்கம் தொடரக் கூடுமா?

ஆம். பசிபிக் பெருங்கடலின் வெப்பநிலை மாறுபாடு குறையத் தொடங்கும்போது, வளி டு மண்டலம் மற்றும் பெருங்கடல் அமைப்பு உடனடியாக இயல்பு நிலைக்குத் திரும்புவதில்லை. எனவே, 'எல் நினோ'வுடன் தொடர்புடைய டு சில காலநிலை தாக்கங்கள் அதன் உச்சகட்ட நிலைக்குப் பிறகும் தொடரக் கூடும். தமிழகத்தைப் பொருத்தவரை. 2027-ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே வரையிலான கால கட்டத்தில் வெப்பத்தின் தாக்கம் குறித்துக் கூர்ந்து கவளிக்க வேண்டும். அதே வேளையில், இதன் உண்மையான கால அளவு மற்றும் தீவிரம் ஆகியவை அடுத்தடுத்த சுண்காணிப்பு கள் மற்றும் முன்னறிவிப்புகளைப் பொருத்தே அமையும்.

தமிழ்நாட்டில் அதிக வெப்ப அலைகளை தானாகவே ஏற்படுத்துமா?

தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட வெப்ப அலையை பல மாதங்களுக்கு முன்பே கணிக்க எல்நினோவை மட்டும் பயன்படுத்த முடியாது. எல் நினோவின் பின்னணி, காலநிலையை மாற்றக்கூடும். சில பகுதிகளில் வெப்பமான நிலைமைகள் ஏற்படுத்தக்கூடும். ஆனால், ஒரு தனிப்பட்ட வெப்ப அலையானது உண்மையான வெப்பநிலை, ஈரப்பதம், காற்று, மேக மூட்டம், மழைப்பொழிவு, வெப்பமான நிலைமைகள் நீடிப்பது மற்றும் உள்ளூர் மற்றும் பிராந்திய சுழற்சி ஆகியவற்றைப் பொருத்தது.

சென்னை அதிக வெப்ப அழுத்தத்தை அனுபவிக்கக் கூடுமா?

நீண்டகால வெப்ப காலங்களில் சென்னை மற்றும் பிற நகர்ப்புறங்களுக்கு சிறப்புக் கவ னம் தேவை. சாலைகள், கட்டடங்கள், பிற நகர்ப்புற மேற்பரப்புகள் வெப்பத்தை உறிஞ்சி தக்கவைத்துக் கொள்ளும். இரவுகளும் வெப்பமாக இருக்கும்போது, பகல்நேர வெப்பத்திலிருந்து மீண்டு வர மனித உடலுக்குக் குறைந்த வாய்ப்பே கிடைக்கிறது. எனவே, சென்னையில் வெப்பத் தயார்நிலையைப் பொருத்தமட்டில் பகல் மற்றும் இரவுநேர வெப்பநிலை இரண்டையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

2027-ல் வெப்பமான சூழல் எவ்வளவு காலம் நீடிக்கும்?

இது குறித்துத் துல்லியமான முடிவுத் தேதியைக் குறிப்பிடுவது தற்போதைய நிலையில் மிக முன்கூட்டியதாக இருக்கும். 2027-ஆண்டின் முதல் பாதியில், குறிப்பாக இயல்பாகவே வெப்பம் அதிகமாக இருக்கும் மார்ச் முதல் மே வரையிலான மாதங்களில், வெப்பமான சூழல் நிலவுவதற்கான வாய்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம்.

எல் நினோ குறித்து மக்கள் கவலைப்பட வேண்டுமா?

பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. இருப்பினும், எல் நினோ என்பது முன்கூட்டியே தயாராவதற்கான ஒரு முக்கியமான அறிகுறியாகும். எல்நினோ தானாகவே தொடர்ச்சியான கடும் வெப்பத்தை ஏற்படுத்தும் என்று கருதுவதற்குப் பதிலாக, சமீபத்திய பருவகால, நீண்ட கால முன்னறிவிப்புகளைக் கண்காணிப்பதிலும், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் மாவட்ட அளவிலான எச்சரிக்கை களைப் பின்பற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

– தினமணி

57வது ஜிஎஸ்டி கவுன்சிலின் – அதிகாரப்பூர்வ சீர்திருத்தங்கள்

57வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட அனைத்து நடைமுறை மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்தங்களும் ஏப்ரல் 1, 2027 முதல் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வரவுள்ளன.

வணிகங்களை எளிதாக்கவும் (Ease of Doing Business), வரி அதிகாரிகளின் நேரடித் தலையீட்டைக் குறைக்கவும் தொழில்நுட்பம் மற்றும் தானியங்கி (Automation) முறைகளின் அடிப்படையில் இந்த மாற்றங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வரி விகிதங்களில் மாற்றமில்லை (No Rate Changes)

- இந்த கூட்டத்தில் எந்தவொரு பொருளின் மீதான வரி விகிதங்களும் மாற்றப்படவில்லை. தற்போதைய வரி விகிதக் கட்டமைப்பு சீராக உள்ளதால், வணிகர்களின் வசதிக்காக இனி வரி விகித மாற்றங்கள் குறித்த ஆலோசனைகள் ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே (ஒவ்வொரு ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும் வகையில்) தனியாக நடத்தப்படும் என்று நிதியமைச்சர் தெரிவித்தார்.

நேர்மையான வாங்குபவர்களுக்கு ஐடிசி (ITC) பாதுகாப்பு

- சப்ளை சங்கிலியில் (Value chain) மேலே உள்ள ஏதேனும் ஒரு சப்ளையர் போலி பில் கொடுத்தாலோ அல்லது வரி செலுத்தத் தவறினாலோ, இறுதி நுகர்வோரான நேர்மையான வணிகரின் உள்ளீட்டு வரி வரவு (ITC) முடக்கப்படாது.
- சிஜிஎஸ்டி சட்டம் பிரிவு 162C-இல் கொண்டு வரப்பட்டுள்ள இந்த திருத்தம் நேர்மையான வரி செலுத்துவோரைப் பாதுகாக்கிறது. மேலும், பணியாளர் ஆரோக்கியம், ஆயுள் காப்பீடு, டெலிகாம் டவர்கள் போன்ற கூடுதல் வணிகச் செலவுகளுக்கும் ஐடிசி அனுமதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

90% ரீஃபண்ட் கோரிக்கைகள் 3 நாட்களில் தானாகவே முடியும்

- தானியங்கி ஒப்புதல் (Automated Processing): தகுதியான ரீஃபண்ட் (Refund) கோரிக்கைகளில் 90% கோரிக்கைகள், விண்ணப்பித்த 3 வேலை நாட்களுக்குள் மனிதத் தலையீடு ஏதுமின்றி கணினி மூலமாகவே தானாகவே அங்கீகரிக்கப்பட்டு வணிகர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.
- குறைக்கப்பட்ட கால அவகாசம்: அதிகாரிகள் ரீஃபண்ட் விண்ணப்பத்தை ஏற்பதற்கான கால அவகாசம் 15 நாட்களிலிருந்து 10 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாட்களுக்குள் அதிகாரிகள் பதிலளிக்காவிட்டால் அது தானாகவே ஏற்கப்பட்டதாகக் (Deemed acknowledged) கருதப்படும்.

சரக்குகள் சோதனையில் புதிய கட்டுப்பாடு

- சாலைகளில் செல்லும் சரக்கு வாகனங்களை இடைமறித்துச் சோதனை செய்வது, தடுத்து வைப்பது (Detention) அல்லது பறிமுதல் செய்வது (Seizure) போன்ற நடைமுறைகள் இனி சரக்குகளை அனுப்பும் மாநிலம் (Supplier state) அல்லது வாங்கும் மாநிலத்தின் (Destination state) அதிகாரிகளால் மட்டுமே செய்யப்பட முடியும்.
- மேலும், ஏதேனும் குறிப்பிட்ட உளவுத் தகவல் (Specific intelligence) இருந்தால் மட்டுமே வாகனங்களை நிறுத்த முடியும். அதற்கு குறைந்தபட்சம் இணை ஆணையர் (Joint Commissioner) அந்தஸ்தில் உள்ள அதிகாரியின் ஒப்புதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆலைகளுக்கு வெளியே உள்ள கட்டுமானங்களுக்கும் ஐடிசி (ITC)

- புதிய விதிகளின்படி, தொழிற்சாலைகளுக்கு வெளியே அமைக்கப்படும் டெலிகாம் டவர்கள் (Telecom towers) மற்றும் குழாய்த்தொடர்கள் (Pipelines) போன்ற வணிகக் கட்டுமானங்களுக்குச் செலுத்தப்படும் வரிக்கும், இயந்திரங்கள் மற்றும் ஆலைகளுக்கான கிரெடிட்களுக்கும் (Plant and Machinery credit) ஏப்ரல் 1, 2027 முதல் உள்ளீட்டு வரி வரவு (ITC) பெறத் தகுதி வழங்கப்பட்டுள்ளது. (குறிப்பு: தலைகீழ் வரி கட்டமைப்பின் கீழ் உள்ள உள்ளீட்டு சேவைகளுக்கான ரீஃபண்ட் சலுகை மட்டும் முன்கூட்டியே நவம்பர் 1, 2026 முதல் தொடங்குகிறது).

எடை தராசு தொழிலுக்கு இனி ஒரு முறை பதிவு செய்தால் போதும்

தமிழகத்தில் தராசு அளவிடும் கருவிகளை உற்பத்தி செய்பவர், தமிழகத்தில் எடை விற்பனையாளர்கள் உரிமத்தை இனி ஆண்டுதோறும் புதுப்பிக்க தேவையில்லை. தற்போது, அந்த உரிமம் வழங்கும் நடைமுறையை, நிரந்தர பதிவு முறையாக மாற்றி தொழிலாளர் நலத்துறை உத்தரவிட்டுள்ளது.

எடை தராசுகள் தொடர்பாக, சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் பதிவு செய்து, உரிமம் பெற வேண்டும். பின், அதை ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டும். இதற்கு கட்டணம் செலுத்த வேண்டும்.

நாடு முழுதும் இதை எளிதாக்குமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அதை பின்பற்றி, தமிழகத்தில் இனி உரிமத்தை ஆண்டுதோறும் புதுப்பிக்க தேவை இல்லை என அரசு கூறியுள்ளது.

மேலும் புதிய கட்டணமாக ஒருமுறை பதிவுக்கு, உற்பத்தியாளர்களுக்கு ரூ. 40,000/-, விற்பனையாளர்களுக்கு ரூ. 5000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட தொழிற்சாலைகள் உரிமம் அக்., 31க்குள் புதுப்பிக்க உத்தரவு

மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட தொழிற்சாலைகளின் உரிமத்தை ஆன்லைன் மூலம் இம்மாதத்திற்குள் (அக்., 31) புதுப்பிக்க வேண்டும் என மதுரை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் தமிழ்செல்வன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த 3 மாவட்டங்களில் செயல்படும் தொழிற்சாலைகள் அக்., 31க்குள் புதுப்பிக்க அலுவலகத்திற்கு நேரில் வரவேண்டாம். **https://dish.tn.gov.in** என்ற இணையதளத்தில் கட்டணம் செலுத்தி புதுப்பிக்க வேண்டும். உடன் அதற்கான உரிமத்தை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். உரிமம் திருத்தம், மாற்றம் ஆகியவற்றிற்கு ஆன்லைன் மூலம் உரிமக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். இதுபோல் ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல், நீக்குதல்) சட்டம், மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் சட்டம் விதிகளின் கீழான உரிமத்தையும் ஒப்பந்ததாரர்கள் இணையவழி மூலம் உரிமக்கட்டணம் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளலாம்.

அக்., 31க்கு பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது ஏற்கனவே நடை முறையில் உள்ள தாமதக் கட்டணம் செலுத்த வேண்டும்.

மறுசுழற்சி எனும் தங்கச் சுரங்கம்!

மக்கள்தொகை கட்டுப்பாடு விஷயத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ஆண்டுக்கு 11 லட்சம் குழந்தைகள் தமிழகத்தில் பிறந்த நிலையில், இப்போது பத்து லட்சத்துக்கும் குறைவாகப் பெறும் மாநிலமாக மாறியுள்ளது.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் மோதிரம் வழங்கப்படும் என்று முதல்வர் ஜோசப் விஜய் அறிவித்துள்ளார். தனியார் மருத்துவமனைகளிலும் பிறக்கும் குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் வழங்கலாமே என்று தோன்றுவது நியாயமே.

ஆண்டுக்கு சுமார் ஐந்து லட்சம் கிராமுக்கும் அதிகமான தங்கத்துக்கு எங்கே போவது என்கிற கேள்வி இயல்பாக எழும்.

தமிழ்நாட்டிலேயே ஐந்து லட்சம் கிராம் அல்ல, அதற்கும் மேலும் ஆண்டுதோறும் தங்கம் உற்பத்தி செய்யக்கூடிய சுரங்கம் இருக்கிறது. நாம்தான் அந்தத் தங்கத்தை இன்னும் எடுக்காமல் இருக்கிறோம்.

தென்னாப்பிரிக்காவின் தங்கச் சுரங்கங்களில் இருந்து ஒரு டன் தங்கத்தாது சுத்திகரிப்பு செய்யப்பட்டால், ஐந்து கிராம் தங்கம் கிடைக்குமென்பது தரவு. ஆனால், வீணாகிப் போனதாகக் குப்பையில் எறியப்படும் ஒரு டன் எடையளவு அறிதிறன்பேசிகளில் இருந்து சுமார் 35 பவுன் தங்கம் எடுக்க முடியும் என்பது வியப்பான தகவல்.

உலகில் மூன்றாவது அதிக அளவு மின் மற்றும் மின்னணுக் கழிவுகளை உற்பத்தி செய்யும் நாடு இந்தியா. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவுகளின்படி, இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 14 லட்சம் மெட்ரிக் டன் மின்னணுக் கழிவுகள் உற்பத்தியாகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 2024-25 ஆம் ஆண்டில், சுமார் 4.65 லட்சம் டன் உற்பத்தி ஆகியுள்ளது.

மின் மற்றும் மின்னணுக் கழிவுகள் சுமார் 140 வகைகள் இருக்கும். மேஜைக் கணினி, மடிக் கணினி மற்றும் சார் உபகரணங்கள், தொலைபேசி, அழைப்பு மணி, கைப்பேசி, ஸ்மார்ட் வாட்ச், தொலைக்காட்சி, செட்- டாப் பாக்ஸ், மோடம், ஸ்கேனர், ஆற்றல் சேமிப்பு விளக்கு, மின்விசிறி, காது கேட்கும் கருவி என்று மிகப் பெரிய பட்டியல் இருக்கிறது.

இவை எல்லாமே வீடுகளுக்கு அடிப்படைத் தேவைகள்தாம். ஆனால், ஒவ்வொன்றும் எத்தனை இருக்கின்றன என்று பார்த்தால், எவ்வளவு மின்னணுக் குப்பைகளை வீட்டில் சேர்த்து வைத்திருக்கிறோம் என்பது தெரியவரும்.

அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட ஆயுள் காலம்தான் உண்டு; அவற்றைத் தாண்டி உபயோகிப்பதும் வீணாகி போனவற்றை வீடுகளில் சும்மா வைத்திருப்பதும் நம் ஆரோக்கியத்துக்கும், பாதுகாப்புக்கும் அபாயம் என்ற விழிப்புணர்வுகூட நம்மிடம் இல்லை.

தமிழகத்தின் மொத்த மின்னணுக் கழிவுகளில் இருந்து உயர் மதிப்புள்ள மின்னணுக் கழிவுகளாகிய அறிதிறன்பேசிகள் மற்றும் மின்சுற்றுப் பலகைகள் (பிரின்டட் சர்க்யூட் போர்டு) மட்டும் சுமார் 35 ஆயிரம் டன் இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. இவற்றிலிருந்து வெள்ளி, செம்பு, பலேடியம் முதலான உலோகங்களைத் தவிர்த்து, தங்கம் மட்டும் பத்து டன் அதாவது ஒரு கோடி கிராம் மீட்கக்கூடிய அளவாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதை மீட்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

மின்னணுக் கழிவுகள் மேலாண்மை விதிகள் 2022-ன் படி அவற்றைக் கையாளுவதில் நான்கு நிலைகள் உள்ளன. முதலாவது, அவற்றைச் சேகரிப்பது. இந்தப் பணியை மின்னணு சாதனங்களின் உற்பத்தியாளர்களும் பிற தனியார் ஆர்வலர்களும் ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.

இப்போதெல்லாம் பல குடியிருப்பு வளாகங்களிலும் பொது இடங்களிலும் வீணான மின்னணுக் கருவிகளைச் சேகரித்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆனால், அவற்றில் தம்முடைய உபயோகமற்ற பழைய அறிதிறன்பேசிகள், மடிக்கணினிகள் போன்றவற்றைத் தருவதில் பலருக்கும் மிகுந்த தயக்கம் இருக்கிறது.

அவற்றின் நினைவக அட்டைகளில் இருக்கிற விவரங்கள் வேறு யார் மூலமாவது எடுக்கப்பட்டு, தவறான உபயோகத்தில் நாம் நஷ்டப்பட வேண்டி வருமோ என்கிற பயம் முக்கியக் காரணம்.

அறிதிறன்பேசியின் திரை வேலை செய்வதாக இருந்தால், நிச்சயமாக தொழிற்சாலை மீட்டமைப்பு (பேக்டரி ரீ செட்) மூலம் அனைத்து விவரங்களையும் அழித்து விடலாம்.

திரை வேலை செய்யாதபோது, இப்போதைய அறிதிறன்பேசிகளில் பெரும்பாலானவை திறந்து பார்க்க முடியாத அளவுக்கான அமைப்புடன் வருவதால், உள்ளே இருக்கிற விவரங்களை நீக்கிவிடுவது வெளிப்படையாக சாத்தியம் இல்லை.



எனவே, அவற்றைச் சேகரிக்க வருபவர்கள், தருபவர்களின் முன்னிலையிலேயே அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் அவற்றை மொத்தமாக அழித்து விட்டு வாங்குகிற ஏற்பாட்டை செய்தால் மட்டுமே அவற்றைப் பெருமளவு சேகரிக்க முடியும்.

இரண்டாவது, அவற்றைப் பிரித்து பாகங்கள் ஆக்குதல். சில முறையான அமைப்புகளும் பல முறைசாரா தனியார் அமைப்புகளும் இதைச் செய்கின்றன. இந்தச் சந்தையில் 70 முதல் 90 சதவீதம் வரை இன்றைய தேதியில் முறை சாராத அமைப்புகளே இருக்கின்றன.

அவற்றில் பலவும் சமூக, சுற்றுச்சூழல் சார்ந்த அக்கறையின்றி 'குறைவாக இருப்பினும் விரைவான லாபம்' காணும் நோக்கில் சாதனங்களைப் பிரிப்பதையும் உடைப்பதையும் அவற்றிலிருந்து தனிமங்களைப் பிரித்தெடுத்துக் கொள்வதையும் முழுமையாகச் செய்யாமல் பெரும்பாலானவற்றை அப்படியே ஆற்றோரங்களிலும் நீர்நிலைகளின் அருகிலும் விட்டு விடுகின்றனர்.

அமிலக் கழுவுதலின் கழிவுகள், எரிக்கப்படும் நெகிழிக் கழிவுகள் ஆகியவை முறையின்றிச் செய்யப்படுவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் அபாயங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

மூன்றாவது, சேகரிக்கப்பட்ட கழிவுகளைப் பகுத்து சரியான சுத்திகரிப்பு தொழில்நுட்பங்கள் மூலம் உலோகங்களைப் பிரித்தெடுப்பது. இந்தப் பணி தனியாரிடம் விடப்படாமல் அறிதிறன்பேசிக் கழிவுகளின் மேலாண்மையை அரசே முன்வந்து ஏற்று நடத்த வேண்டும்.

ஏனென்றால், தங்கம் போன்ற உயர் தனிமங்களைப் பிரித்தெடுப்பதற்கு உயர்தர வேதியியல் மற்றும் உலோகவியல் தொழில்நுட்பத்தில் சுத்திகரிப்பு செய்ய வேண்டும். அதற்கான கட்டமைப்புகளை சமரசமின்றி முழுமையாகச் செய்ய வேண்டும். அதற்கெல்லாம் மிகுந்த ஆரம்பகட்டச் செலவு பிடிக்கும். அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் முன்வந்தால் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு ஏற்பாடுகளும் கூடவே ஏற்படும்.

நான்காவது, மீதமுள்ளவற்றை என்ன செய்வதென்று ஆய்ந்து, மண்ணுக்கும், நீருக்கும், காற்றுக்கும், மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்களுக்கும் எந்த அபாயமும் இல்லாத வகையில் அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை எடுப்பது; இதில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் போன்ற கண்காணிப்பு அமைப்புகளின் மேற்பார்வை மிகவும் அவசியம். அரசு நிறுவனம் என்றால் கூடுதல் கட்டுப்பாடு இருக்கும்.

இவை நான்கும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் 'கழிவில் இருந்து கரன்சி' என்ற கருத்துருவாக்கம் மகத்தான வெற்றி பெறும்.

இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 22 லட்சம் டன் மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் திறன் கொண்ட அமைப்புகளும், 300-க்கும் மேற்பட்ட பதிவு செய்துள்ள நிறுவனங்களும் உள்ளன.

உத்தர பிரதேசத்தில் மட்டும் ஆண்டுக்கு 10.6 லட்சம் டன் மறுசுழற்சித் திறன் கொண்ட ஆலைகள் உள்ளன. தமிழ்நாட்டில் 91 ஆயிரம் டன் திறன் மட்டுமே உள்ளது. நிறுவன அலகுகள் என்று பார்த்தால் உத்தர பிரதேசத்தில் 100-க்கும் அதிகமாக உள்ளன; தமிழ்நாட்டில் 30 மட்டுமே உள்ளன.

தற்போது தமிழக அரசு நேரடியாக மறுசுழற்சி ஆலைகளை நடத்தவில்லை. தமிழகத்தில் உருவாகும் மின்னணுக் கழிவுகளில் 90 சதவீதத்துக்கும் அதிகமான பகுதி முறையான அனுமதியற்ற மறுசுழற்சி நிலையங்களுக்கு செல்வதால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள உலோகங்களில் பெரும் பகுதி பாதுகாப்பற்ற முறைசாரா மறுசுழற்சியில் குறைந்த திறனுடன் மீட்கப்படாமல் வீணாகிறது.

அதில் இன்னொரு நீண்ட கால சுற்றுச்சூழல் அபாயமும் உள்ளது. மின் கழிவுகளில் சரிவரப் பிரித்தெடுக்கப்படாமல் குப்பைகளாகக் கொட்டப்பட்டு மண்ணில் புதையும் கன உலோகங்கள், ஈயம், காட்மியம், மெர்குரி, குரோமியம் போன்றவை நிலத்தை மலடாக்கி விடும் தன்மை கொண்டவை.

நச்சு ரசாயனங்கள், நிலத்தடி நீர், ஆறுகள், ஏரிகள் மற்றும் குடிநீரை மாசுபடுத்தி, மனிதர்களுக்கும் நீர்வாழ் உயிரினங்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகம்.

நெகிழிகளைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்த்து விட்டு இப்போது கைபிசைந்து நிற்கும் நிலையைவிட மோசமான சூழலியல் கேடுகள், அறிதிறன்பேசிகள் மற்றும் மின்னணுக் கருவிகளின் மிகைப்பட்ட தொடர் உபயோகத்தால் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

அதே சமயம் அவற்றைப் பாதுகாப்பான முறையில் மறுசுழற்சி செய்யும் கடப்பாட்டை வாழ்வியல் ஆக்கினால் அவையே ஒரு தங்கச் சுரங்கம் என்பதையும் உணர வேண்டும். அரசு முன்வந்து மின்னணுக் கழிவுகளில் இருந்து தங்கம் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை தொடங்கினால் தொடர்ந்து அதிகரித்துவரும் மின்னணு சாதனங்களின் எண்ணிக்கை குறித்து நாம் கவலை கொள்ளும் அவசியம் இருக்காது.

இத்தகைய மின்னணுக் கழிவுகளின் மறுசுழற்சியை ஒரு தனித்துறை தொழிலாக உருவாக்கி நகர்ப்புற சுரங்க மையம் அல்லது தொழிற் பூங்காவை உருவாக்கினால், அது இந்தியாவுக்கே வழிகாட்டியாக மாறி, அடுத்துவரும் ஆண்டுகளில் பசுமைத் தொழில் அர்ப்பணிப்பை உலகறியச் செய்யும்.

- தி இந்து(த)

நாலடியார்

மெய் வாய் கண் மூக்குச் செவி' என்னும் பெயர் கொண்ட ஐந்து புலன்களின் வழியாக எழுகின்ற வேட்கை என்னும் ஆசையினை...

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக் கைவாய்,
கலங்காமற் காத்து, உய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்.

(பாடல் 59 அதிகாரம்: துறவு)

'மெய் வாய் கண் மூக்குச் செவி' என்னும் பெயர் கொண்ட ஐந்து புலன்களின் வழியாக எழுகின்ற வேட்கை என்னும் ஆசையினை, அதனால் தன் மனம் கலங்காமற் காத்துக் கொண்டவனாகத் துறவு ஒழுக்கத்திலே அந்த மனத்தைச் செலுத்துகின்ற ஆற்றல் உடையவன் எவனோ அவன் தப்பாமல் வீட்டின்பத்தைப் பெற்று விடுவான். 'புலனிச்சைகளினால் மனம் சிதறாமற்படிக்கு, உள்ளத்து உறுதியுடன் தவநெறியிலே ஈடுபடுகிறவன் தவறாமல் முத்தியடைவான்; பிறர் அடையார்' என்பது கருத்து.

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் - புதிய நிர்வாக பதவியேற்பு விழா



2026-2028ம் ஆண்டிற்கான தலைவர் பொறுப்பை ஏற்கிறார் திரு. K.K. குபேந்திரன் அவர்கள். உடனடி முன்னாள் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் பதவிப் பிரமானம் செய்து வைத்தார். உடன் சேம்பர் நிர்வாகிகள், ஆலோசகர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள்

படம் இடமிருந்து வலம்: துணைத்தலைவர் திரு. K.K. தினகரன், பொதுச்செயலாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜீ, தலைவர் திரு. K.K. குபேந்திரன், பொருளாளர் திரு. T.N. சூரியபிரகாஷ், சிறப்பு விருந்தினர் திரு. R. இளங்கோவன், உடனடி முன்னாள் தலைவர் திரு. K.K. தினேஷ், கௌரவ விருந்தினர் திரு. C.L. ஸ்ரீதர், துணைத்தலைவர் திரு. A.B. குமரேஷ் பாபு, ஆலோசகர்கள் திரு. V.G. ராம்தாஸ் மற்றும் திரு. T.K.D. மோகன்

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 2026-2028ம் ஆண்டிற்கான புதிய தலைவர் மற்றும் நிர்வாகிகளின் பதவி ஏற்பு விழா கடந்த 06.10.2026 அன்று மாலை 6 மணிக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

தலைவர்(2024-26) திரு. K.K. தினேஷ் அவர்கள் விழாவின் துவக்கத்தில் தலைமையேற்று வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கடந்த இரண்டு ஆண்டுகால் அனுபவங்களை சுருக்கமாக விவரித்து, தன்னுடன் பணியாற்றிய நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, தமது தலைமைப் பொறுப்பை நிறைவு செய்ததுடன், 2026-2028ம் ஆண்டிற்கான தலைவராக தலைமைப்பொறுப்பேற்க திரு. K.K. குபேந்திரன் அவர்களை அழைத்தார். அதனை திரு. K.K. குபேந்திரன் மனமுவந்து ஏற்றுக்கொண்டார். முன்னாள் தலைவர்கள், சிறப்பு விருந்தினர்கள், சேம்பர் உறுப்பினர்கள், முக்கியப் பிரமுகர்கள் பலர் சூழந்திருந்த அரங்கில் பதவி ஏற்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

உடனடி முன்னாள் தலைவராக மாறிய திரு. கே.கே. தினேஷ் அவர்கள், உறுதி மொழி முன்மொழிய, அதனை தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் வழிமொழிந்தார். அவரைத் தொடர்ந்து, புதிய நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் பெயர் விபரங்களை முன்னாள் தலைவர் திரு. T.R. மோகன்ராம் மற்றும் குமரன் B. ஜகுவா ஆகியோர் அறிவிக்க, அவர்கள் அனைவரும் மேடைக்கு வருகை தந்து உறுதிமொழி ஏற்று பதிவியை ஏற்றனர். இதனைத் தொடர்ந்து, தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் தமது ஏற்பரையை வழங்கினார். இதனையடுத்து, விழா தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



திரு. C.L. ஸ்ரீதர்

இந்நிகழ்வையடுத்து, கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ஸ்ரீ மீனாக்ஷி கன்ஸ்ட்ரக்ஷன் உரிமையாளர் திரு. C.L. ஸ்ரீதர் அவர்களை சிறப்பு அழைப்பாளர் திரு. தீபக் அவர்கள் வெகு அழகாக பேச அழைத்தார். அதனை ஏற்று பேசிய திரு. C.L. ஸ்ரீதர் அவர்கள், புதிய நிர்வாகத்தை வாழ்த்தினார். தொழில், சேவை எதற்கும் வயது தடையில்லை, அனைத்திற்கு வழிகாட்டியாக நமது சேம்பர் செயல்படுவதை பாராட்டிப் பேசினார்.



திரு. R. இளங்கோவன்

அவரைத் தொடரந்து, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட விசால் தி மால்-ன் தலைவர் திரு. R. இளங்கோவன் அவர்களை சிறப்பு அழைப்பாளர் திரு. O.M. அஜித் குமார் அவர்கள் மிக அருமையாக அறிமுகம் செய்து பேச அழைத்தார். அதனையேற்று பேசிய திரு. R. இளங்கோவன் அவர்கள், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பிற சமுதாய தொழில் முனைவோர்களுக்கு முன்னோடி அமைப்பாக இருப்பதைத் தெரிவித்தார். மேலும், இந்த தளம் முன்னோடி தொழில் முனைவோர்களை, புதிய மற்றும் இளைய தலைமுறை தொழில்முனைவோர்களை இணைத்து தங்களின் அனுபவங்களை பெரும் சிறந்த களமாக இருப்பதாகத் தெரிவத்து, புதிய நிர்வகிகளின் செயல்பாடுகள் சிறக்க வாழ்த்திப் பேசி தமது உரையை நிறைவு செய்தார்.

விழாவில் கலந்து கொண்ட இரண்டு விருந்தினர்களையும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நினைவுப் பரிசுகளை வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவித்தது.

தொடர்ந்து, விழாவில் கலந்து கொண்ட முன்னாள் தலைவர்கள், சமூக அமைப்பு நிர்வாகிகள், முக்கியப் பிரமுகர்கள் பலர் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். புதிய தலைவர் மற்றும் நிர்வாகிகளை பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிறைவாக, பொதுச் செயலாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி அவர்கள் நன்றி நவில, விழா இனிதே நிறைவு பெற்றது.



புதிய நிர்வாகிகள் & செயற்குழு உறுப்பினர்கள் உறுதிமொழி ஏற்கிறார்கள்

ஜிஎஸ்டி குறைதீர் கூட்டம்
நமது சங்கத்தின் சார்பாக அளிக்கப்பட்ட கோரிக்கைகள்

06.10.2026 – அன்று வணிகவரித்துறையின் அக்டோபர் முதல் வார குறை தீர்க்கும் கூட்டத்தில் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அளிக்கும் கோரிக்கைகள்.

- GST உச்சவரம்பு சேவைக்கு 40 லட்சமாகவும் வியாபாரத்திற்கு 80 லட்சமாக உயர்த்த வேண்டும்.
- வியாபாரிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கும் காலக்கெடு 5 ஆண்டு வரை என்பதை 18 மாதத்திற்குள் கொடுக்க லியுறுத்தியுள்ளோம். வணிகர்களின் உள்ளீட்டு வரி எடுப்பதற்கு கால அவகாசம் 18 மாதங்கள் மட்டுமே உள்ளது.
- லாரி வாடகை ரசீது போன்ற ஆவணங்கள் 8 வருடங்கள் (உள்ளீட்டு வரி எடுத்த இன்வாய்சிற்கு) பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் தளர்த்த வேண்டும்.
- வியாபாரிகள் தங்களுடைய விளக்கங்கள் கூறுவதற்கு ஒரு தனியான ரிமார்க்ஸ் காலம் (Remarks Column) GST ரிட்டனில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- GSTR-9 படிவத்தைத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு பின்வருமாறு நீட்டிக்கப்பட வேண்டும்:
  - திருத்தங்களை மேற்கொள்வதற்கான கடைசி தேதி: 31.12.2026-லிருந்து 31.01.2027 வரை
  - உள்ளீட்டு வரி வரவைப் (ITC) பெறுவதற்கான கடைசி தேதி: 30.11.2026-லிருந்து 31.12.2026 வரை
- வரி ஏய்ப்புச் சந்தேகம் காரணமாகச் சோதனைச் சாவடிகளில் சரக்குகள் தடுத்து நிறுத்தப்படும் நேர்வுகளில், வரியை உடனடியாகச் செலுத்துவதற்கு ஏதுவாக 'ரொக்கப் பேரேடு/ முன்கூட்டிய வரி செலுத்தும் முறை' (Cash Ledger/ Advance Tax Payment System) அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
- வணிக கட்டுமான பொருட்களுக்கான உள்ளீட்டு வரி (Input credit) நிறுவனங்கள் எடுத்துக்கொள்வதற்கு ஆவண செய்ய வேண்டும்.
- ரொக்கப் பேரேட்டில் (Cash Ledger) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'தானியங்கிப் பற்று' (Auto Debit) (Blocked credit) முறை வணிக நிறுவனங்களுக்கு நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே, முந்தைய நேரடிப் பணப் பட்டுவாடா முறையை மீண்டும் நடைமுறைப் படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.



வணிகவரி இணை ஆணையர்கள் திருமதி. சாந்தி மற்றும் திரு. தர்மராஜ் (புலனறிவு பிரிவு) அவர்களிடம் சேம்பர் ஜிஎஸ்டி குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் மனு அளித்தபோது.

- மாநில அளவிலான கூட்டத்திற்கு முன்னதாகவே வர்த்தகச் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் அமர்வை ஏற்பாடு செய்வது, பல்வேறு தளங்களில் குறைகளை முன்வைக்க உதவியாக இருக்கும்; இத்தகைய ஏற்பாடு மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.
- GST மாற்றங்கள் குறித்து சர்குலர் மற்றும் சட்டங்களைப் பற்றி எல்லா சங்கங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.


மத்திய ஜிஎஸ்டி கமிஷனர் திவாரி அவர்களுடன் சேம்பர் பொதுச் செயலாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு & ஜிஎஸ்டி குழு சேர்மன் திரு. என்.எஸ். பிரேம் குமார்.

16.09.2026 அன்று நடைபெற்ற மத்திய ஜிஎஸ்டி வரிகுறை தீர்க்கும் கூட்டத்திலும் நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வழங்கினர்.

சிட்கான் 2026 தொழில் வர்த்தக கண்காட்சியில் பொதுமக்களுக்கு குலுக்கல் முறையில் பரிசுப்பொருட்கள் வழங்கிய நிறுவனங்கள் மற்றும் கணவான்கள் (சென்ற இதழில் விடுபட்டவர்களின் பெயர்கள்)

1. பானு பிளாஸ்டிக் – திரு. வி.ஆர். சேகர்
2. சூரியா லேமினேசன் – திரு. ஏ.எஸ்.வி. கணேஷ்



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES,FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...





மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

VIJAYASHANKAR SCREEN SUPPLIERS

Non Woven Fabrics & Bags

Surgical Spunbond & Lace

SMMS

100% Viscos

Hydrophilic

JUTE FABRICS & BAGS

COTTON FABRICS & BAGS

Sanitary Napkin Raw Materials

Screen Printing Materials /

Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper



Surgical Gown, Mask & More



N95 Masks

PPE Kit Surgical

J.A. SANKAR


94431 34465

For Order & Info

93441 04451, 91500 32885 / 86

H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com

B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

விஜயலெட்சுமி DTP& ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1992 31 Years 2023 SVLS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

தினசரி & கட்டிங் மாத காலண்டர்

12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்

தமிழ் டைரி ஆங்கில டைரி

30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்

20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை

பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY

விநாதி கவர் 7 DAYS DELIVERY

சாமி படம் வீட்லேமினேசன்

ஸ்கூல் லேபிள்





நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873,98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.10.2026 / BPC MDU
Date of Publication 20th of Every Month

KSPL,Madurai

Kuttuva Silicates (P) Ltd.,

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

வேல் மருத்துவமனை

வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

24hrs Service

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.





சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஐவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

Right Treatment is Everyone's Right

நவீன் एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY

தென் தமிழகத்தின்
நம்பர் 1
சோலார் நிறுவனம்

Prakash Green Energy

Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு 78000 ரூ அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

Premium Quality
30-Years Warranty
100% Guarantee

அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்



வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்

+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street, Jaihindpuram,Madurai - 625011